ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 26 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4

Total No. of Questions : 26 ] [ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 102-T (NS)**

**Code No. : 102-T (NS)**

**ಶಿಕ್ಷಣ**

**EDUCATION**

# ಮೂಲ ಪರಿಕಲ್ಪನೆಗಳ ಪರಿಚಯ

# INTRODUCTION TO BASIC CONCEPTS

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

**(ಹೊಸ ಪಠ್ಯವಸ್ತು)**

**( New Syllabus )**

ದಿನಾಂಕ : 30. 06. 2015 ]

Date : 30. 06. 2015 ]

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10.00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1.00 ರವರೆಗೆ ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 60

Time : 10.00 A.M. to 1.00 P.M. ] [ Max. Marks : 60

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*

*Register Number of the Candidate*

## பகுதி – I

கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு மாற்று விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைக்கான புத்தகத்தில் எழுதவும். **எல்லா** வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளிக்கவும் : 10 × 1 = 10

1. பள்ளி நிர்வாகத்தில், சமூகப் பங்கெடுப்பிற்கு (Community participation) வாய்ப்பளிக்கும் காரணி

   (A) மையமாக்கிய பள்ளி நிர்வாகம் (Centralized school administration)

   (B) சமூகநிலை நிகழ்ச்சிகள் (Community programmes)

   (C) மக்கள் பிரதிநிதிகளின் தேர்தல்

   (D) நற்பயனளிக்காத பணிப் பகிர்வு (Effective decentralisation).

2. சமூக செய்திப்பகர்வு கொள்கையின்படி, (Social interaction) அறிவுசார் வழிமுறைகளின் (Cognitive processes) வரிசை நிலை

   (A) கவனித்தல், மனதில் வைத்தல், இயக்க பிரதிப ப்பு (motor responses), ஊக்கம்

   (B) மனதில் வைத்தல் (Retention), இயக்க பிரதிப ப்பு, கவனித்தல், ஊக்கம்

   (C) கவனித்தல், ஊக்கம், மனதில் வைத்தல், இயக்க பிரதிப ப்பு

   (D) மனதில் வைத்தல், கவனித்தல், இயக்க பிரதிப ப்பு, ஊக்கம்.

3. உள்ளடக்கிய கல்விக் கொள்கை (Inclusive Education), கீழ்க்காணும் எத்தகைய காரணிகளின் விளைவாகும் ?

(I) குழந்தைகளின் கற்றலைப் பற்றிய அக்கறை

(II) மாற்றுத் திறனாளிகளிடம் கருணை

(III) சமூக நீதி.

(A) I, II மற்றும் III (B) I மற்றும் III

(C) I மற்றும் II (D) II மற்றும் III.

4. பாட வளர்ச்சி நிலையில் (Lesson development stage) ஆசிரியர் கீழ்க்காணும் எவ்வகை மதிப்பீடு / தேர்வினைப் பயன்படுத்துகின்றனர் ?

(A) உருவாக்குத் தேர்வு (Formative assessment)

(B) குறையறி சோதனை (Diagnostic test)

(C) இறுதித் தேர்வு (Summative assessment)

(D) சாதனைத் தேர்வு.

5. உருவாக்கு ஆண்டுகளில் (Formative years), தொடக்கத்தில் பா னச் செயல்பாடுகளின் மீது வினை புரியும் சூழல்

(A) அரசியல் (B) கல்வி

(C) குடும்பம் (D) மன உளவியல்.

6. கற்பித்தல் முறையைக் கற்றல் (Learning to teach) இதனை உள்ளடக்கும்.

(I) கற்பித்தல் கலையின் வளர்ச்சி (Pedagogic skills)

(II) பாடப்பொருளை ஆழமாகப் புரிந்து கொள்ளுதல்

(III) பாடப் புத்தகத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளுதல்

(IV) குழந்தைகளைப் புரிந்து கொள்ளுதல்.

(A) I, II மற்றும் III (B) I மற்றும் II

(C) III மற்றும் IV (D) I, II மற்றும் IV.

7. ஆசிரியர்களை இதில் ஈடுபடுத்துவதன் மூலம் தொழிற்சார் வளர்ச்சியை (Teacher's professional development) உண்டாக்கலாம்.

(A) மக்கட் கணக்கெடுப்புப் பணி

(B) பொருள் வளர்ச்சிக்குத் தொடர்பான கலைத்திட்டம் (Curriculum related material development)

(C) தேர்தல் பணி

(D) அவ்வப்பொழுது பயிற்சியளித்தல்.

8. ‘அனைவருக்கும் கல்வி’ இதனை நிச்சயப்படுத்துவதற்கான இன்றியமையாத காரணி

(A) பொருளடக்கம் சார் அடிப்படைக் கற்ற ன் முக்கியத்துவம் (Stress on content based teaching)

(B) பள்ளிகளை அழகுபடுத்துதல்

(C) பெற்றோர்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் ஈடுபாடு

(D) அறிவுக்கூர்மையுள்ள குழந்தைகளின் சேர்ப்பு.

9. இயக்கக் குறைபாடுள்ள ஒரு குழந்தை, (Child with motor disability) கழிப்பறையைப் பயன்படுத்துவதன் இயலாமையினால் பள்ளிக்கு வருவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் குழந்தைகள் எதிர்கொள்ளும் இடையூறு
   (A) கட்டட வடிவமைப்பு (B) உடல் ரீதி
   (C) மனோரீதி (D) மன உளவியல் ரீதி.

10. கருநாடக மாநிலத்திலுள்ள மிகப்பரந்த கல்வியிணைப்பு (Educational network)
   (A) இருப்பிடப் பள்ளிகள் (B) உயர்நிலைப் பள்ளிகள்
   (C) நவோதயா பள்ளிகள் (D) தொடக்கப் பள்ளிகள்.

## பகுதி – II

கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **ஐந்திற்கு** அரைப் பக்கத்திற்கு மிகாதவாறு சுருக்கமாக விடையளிக்கவும் : $5 \times 2 = 10$

11. நற்பயன் தரும் கற்பித்தல் (effective pedagogy) முறையின் முக்கியத்துவம் யாது ?
12. இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் ஏதேனும் இரண்டு பயன்பாடுகளைப் பற்றி விளக்கவும்.
13. கற்றல் காரணங்கள் (Attributes of learning) எவையேனும் இரண்டினை விளக்குக.
14. மாறுதலற்ற பால்வகைச் செயல்பாடுகளை (Stereotyped gender roles) ஒரு பள்ளி எவ்வாறு முறியடிக்கலாம் ?
15. சமத்தேர்வின் ( Peer assessment ) முக்கியத்துவம் என்ன ?
16. சர்வ சிக்ஷ அபியானில் ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட தரமான கல்வியின் எவையேனும் நான்கு நிலைகளைப் பட்டிய டுக.
17. இளமைப் பருவக் காலம் (Adolescent period), சிந்தனாவாதக் காலம் (Period of idealism) என்று கருதப்படுவதன் காரணம் என்ன ?
18. ஸ்டேன்பர்கின் பார்வையில், அறிவுக்கூர்மை வழிமுறையாக அமையப் பெறுவதற்கான ஏதேனும் இரண்டு காரணிகளை விளக்குக.

## பகுதி – III

கீழ்க்கண்ட வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாற்று வினா கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடையளிக்கவும் : $8 \times 5 = 40$

19. உருவாக்குவுரு கற்பித்தல் - கற்றல் செயல்பாடுகளின் (Constructivistic teacher-learning activities) ஏதேனும் ஐந்து பண்புகளை விளக்கவும்.

*அல்லது*

சிறுவர்களின் குழு இயக்கத்தை (Group of dynamics) விளையாட்டின் அமைப்பில் விவரிக்க.

20. சமுதாய அடிப்படையில் (Social context) கற்றலை விளக்கவும்.

*அல்லது*

சமூகமயமாக்குத ல் கலாச்சாரத்தின் (Culture in socialization) பங்கு என்ன ? எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.

21. நீங்கள் விரும்பும் பாடத்தலைப்பில், வகுப்பறையில் பல்வகைப்படுத்துவதற்காகப் பயன்படும் (Diversity in a classroom) மூலத்தைப் பற்றிய ஒரு திட்டத்தைத் தயாரிக்கவும்.

*அல்லது*

V ஆம் வகுப்பு மாணவர்களுக்கு முக்கோணங்களைப் பற்றி அறிவூட்ட வேண்டியுள்ளது. வகுப்பின் முதல் 15 நிமிடங்களில் இக்கற்றல் அம்சத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு குழந்தை-விரும்பத்தகுத்த திட்டம் ஒன்றைத் தயாரிக்கவும். இது எவ்வாறு குழந்தை விரும்பத்தக்கது என்பதை நிரூபிக்கவும்.

22. ஆசிரியர்களுக்கு கல்விசார் சமூகவிய ன் (Educational Sociology for teachers) கற்றல் அவசியம் என்பதைப் பற்றி கலந்துரையாடவும்.

*அல்லது*

மாணவர்களின் சமூகமயமாக்குத ல் ஆசிரியர்களின் பங்கினைப் பற்றி கலந்துரையாடவும்.

23. உங்களுடைய சுயசிந்தனைக்காக, அனுபவப்பூர்வமான கற்றல் கொள்கையை (Theory of experiential) எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.

*அல்லது*

கற்பித்தல் மற்றும் உள்ளுருப்புப் பயிற்சியின் (Internship) போது, NCFTE 2009 இல் பட்டிய டப்பட்ட நல்லாசிரியப் பண்புகளைப் பெறுவதற்கு எத்தகைய அனுபவங்கள் உதவி செய்தன ? ஏன் ?

24. உங்கள் சொந்த அனுபவத்தின் அடிப்படையில், நற்பயனளிக்கும் செய்கைக்காக, எச்சரிக்கையுடன் கூடிய திட்டமிடுத ன் பங்கினை மதிப்பிடவும்.

*அல்லது*

ஆளுமைத் தன்மையின் வெவ்வேறு பரிமாணங்களின் வளர்ச்சியில் நாடகத்தின் பங்கினை மதிப்பிடவும். நாடகத்தின் எத்தகைய அம்சங்களை நீங்கள் பயன்படுத்தினீர்கள் ?

25. ஆசிரியரிடமிருந்து பெறும் கூடுதல் செய்திகள், உயர் அறிவுத்திறன் கொண்ட குழந்தைகளுக்குத் (Gifted children) தேவையில்லை என்று சில கல்வியாளர்கள் நம்புகின்றனர். இந்தக் கருத்து சில அளவுக்கு மட்டுமே சரி என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

*அல்லது*

தாழ்த்தப்பட்ட இனம் மற்றும் பழங்குடியினரை உள்ளடக்கும் கல்வியின் மீது, தேசிய ஒன்றிணைவுக் குழுவின் நிலைத் தாளான ( NCFTE, 2005 ) இன் பரிந்துரைகளை எவ்வாறு செயல்படுத்துவீர்கள் ?

26. மாணவர்களின் தவறுகள், அவர்களது சிந்தனையைப் புரிந்துகொள்ள ஆசிரியர்களுக்கு எவ்வாறு வாய்ப்பளிக்கிறது ? உங்கள் விடையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

*அல்லது*

நீங்கள் பள்ளியில் ஆசிரியராக இருந்தபோது நீங்கள் கண்டு அனுபவித்த கற்றல் இடைவெளிகள் (Learning paces) யாவை ? வகுப்பறைக் கற்றலை (Classroom learning) மேம்படுத்த, கற்றல் இடைவெளிகளின் பங்கினை எடுத்துக்காட்டுகளுடன் கலந்துரையாடுக.